# மதுரை மாநகரில் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா!

## ‘மா மதுரை விழா’வினைத் தொடங்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் மா மதுரை விழாவினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், மதுரையிலிருந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, மதுரை காவல் ஆணையர் முனைவர். ஜெ.லோகநாதன், மாநகராட்சி ஆணையர் சி.தினேஷ்குமார், மதுரை யங் இந்தியன்ஸ் தலைவர் பைசல் அகமது, மா மதுரை விழா தலைவர் விக்ராந்த் கார்மேகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஆக.9-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (8.8.2024) முகாம் அலுவலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக, மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் “மா மதுரை விழா”வினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையில், “மதுரையில் நடைபெறும் மாபெரும் பண்பாட்டுப் பெரு விழா இது!” என்று புகழாரம் சூட்டினார்! வாழ்த்திப் பேருரையாற்றினார்.**

முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு :-

“திங்களைப் போற்றுதும்... திங்களைப் போற்றுதும்... ஞாயிறு போற்றுதும்... ஞாயிறு போற்றுதும்... மாமழை போற்றுதும்... மாமழை போற்றுதும்” என்று சிலப்பதிகாரம் தீட்டிய இளங்கோவடிகள் எழுதினார்!

### பல்வேறு வரலாற்றுப் பெருமைகள் கொண்ட மாநகர்!

இப்போது, “மா மதுரை போற்றுவோம்! மா மதுரை போற்றுவோம்!” - என்று, ‘வேள்பாரி’ தீட்டிய எழுத்தாளர் சு.வெங்கடேசன் எம்.பி அவர்கள் நிகழ்ச்சியை நடத்துகிறார். எல்லாருக்கும் அவர் அவர்களின் ஊர் பெருமைக்குரியதுதான்; போற்றுதலுக்குரியதுதான். அதிலும் குறிப்பாக, மதுரை மாநகர் என்பது பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டது என்று நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

- **இந்தியாவின் பழமையான நகரங்களில் ஒன்று மதுரை.**
- **இரண்டாயிரம் ஆண்டு வரலாறு கொண்டது மதுரை.**
- **பாண்டிய மன்னர்கள் தலைநகராக ஆட்சி செய்த நகரம்.**
- **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியன் ஆட்சி செய்த நகரம்.**
- **“தவறு செய்தவன் மன்னனே ஆனாலும்” மன்னனைக் கண்ணகி கேள்வி கேட்ட மண் இது.**
- **நீதியைக் காக்க தன்னுடைய உயிரையே தந்த மன்னர் ஆட்சி செய்த இடம் இது.**
- **திருமலை நாயக்கரும், ராணி மங்கம்மாளும் ஆண்ட பூமி இது.**
- **புகழ்பெற்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் இருக்கும் கோயில் நகரம் இது.**
- **அனைத்துக் கலைகளும் ஒருங்கே இருக்கும் பண்பாட்டுச் சின்னமாக இந்தக் கோவில் கருதப்படுகிறது.**
- **புகழ்பெற்ற சித்திரைத் திருவிழா, மாபெரும் பண்பாட்டு விழாவாக இது நடைபெற்று வருகிறது.**
- **1866ஆம் ஆண்டே நகராட்சியாக ஆன ஊர் இது.**
- **சென்னைக்கு அடுத்ததாக இரண்டாவது மாநகராட்சியாக 1971ஆம் ஆண்டு மதுரையைதான் மாநகராட்சி ஆக்கினார், அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.**
- **அண்ணல் காந்தி அவர்கள் தன்னை அரையாடை மனிதராக மாற்றிக்கொண்ட இடமும் இந்த மதுரைதான்.**
- **ஏன், என்னுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திய தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்டதும் இந்த மதுரை மண்ணில் இருந்துதான்.**

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். அதனால்தான், பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட நகரம் என்று மதுரையைக் குறிப்பிட்டேன். இத்தகைய மதுரையை மதுரைக்காரர்கள் மட்டுமல்ல; எல்லோரும் போற்றலாம்; ‘மதுரையைப் போற்றுவோம்’ என்று கொண்டாடலாம்!

### சிறப்பான செயல்பாடுகளால் மதுரைக்குப் பெருமை சேர்க்கும் அமைச்சர்கள்!

நம்முடைய திராவிட மாடல் அரசில் மதுரை மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்களை வழங்கியிருக்கிறோம். தங்களின் சிறப்பான செயல்பாடுகளால் இரண்டு பேரும் மதுரைக்கும், நம்முடைய அரசுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

2013ஆம் ஆண்டு முதல் ‘மா மதுரை போற்றுவோம்’ விழா நடந்துகொண்டு இருக்கிறது.

> **“நம்முடைய திராவிட மாடல் அரசில் மதுரை மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்களை வழங்கியிருக்கிறோம். தங்களின் சிறப்பான செயல்பாடுகளால் இரண்டு பேரும் மதுரைக்கும், நம்முடைய அரசுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். 2013ஆம் ஆண்டு முதல் ‘மா மதுரை போற்றுவோம்’ விழா நடந்து கொண்டு இருக்கிறது.”**

‘சாகித்ய அகாடமி’ விருது பெற்ற எழுத்தாளரும், மதுரை நாடாளுமன்ற உறுப்பினருமான சு.வெங்கடேசன் அவர்களின் முயற்சியால் இது தொடங்கப்பட்டது. விழாக்குழுத் தலைவராக மதுரை தியாகராசர் குழுமத் தலைவர் கருமுத்து தி. கண்ணன் அவர்களையும், விழாக்குழு துணைத் தலைவராக மதுரை அபராஜிதா குழுமத் தலைவர் முனைவர் பரத் கிருஷ்ணன் சங்கர் அவர்களையும் கொண்டு இந்த விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடந்து கொண்டு வந்தது.

★ **வரலாற்றைப் போற்றுவோம்,**

★ **வைகையைப் போற்றுவோம்,**

★ மாமதுரையைப் போற்றுவோம் - போன்ற தலைப்புகளில் இது நடந்து கொண்டு வருகிறது. இந்த விழா நடக்கும் நாட்களில் மதுரை மாநகர் புத்துயிர் பெறுகிறது என்றே சொல்லலாம்.

### சிலப்பதிகாரத்தின் ‘இந்திர விழா’ போல...!

★ வைகை தொடங்கும் இடத்திலிருந்து, அது கடலில் கலக்கும் இடம் வரைக்குமான ஆற்றின் பாதை, அதன் கரைகளில் அமைந்திருக்கும் ஊர்கள் ஆகியவற்றின் மாதிரி, வைகை ஆற்றுக்குள் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

காலந்தோறும் மதுரை நகரம் மாறிய காட்சி ஓவியமாகவும், மாதிரி நகரமாகவும் கண்காட்சியாக தமுக்கம் திடலில் அமைக்கப்பட்டிருக்கும்.

★ மதுரை பிரமுகர்களின் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

★ பள்ளி, மாணவ மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டது.

★ கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள், ஊர்வலம், வாணவேடிக்கை ஆகியவை நடத்தப்படுகிறது.

★ இருபுறமும் விளக்குகள் ஏந்தி பொது மக்கள் நிற்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட ‘இந்திர விழா’ போல இவை நடத்தப்படுவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதேபோல், இந்த ஆண்டும் மாமதுரை போற்றும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்று தொடங்கி 11ஆம் தேதி வரை இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் பெருவிழாவாக இதை நடத்திக்கொண்டு வருகிறீர்கள். இந்த ஆண்டு மதுரை போற்றும் விழாவை ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்லும் இந்திய தொழில் கூட்டமைப்பான C.I.I. அமைப்புடன் இளையோர் அமைப்பான “யங் இந்தியன்ஸ்” அமைப்பை பாராட்டுகிறேன். ஊரைப் போற்றும் இளைஞர்களாக நீங்கள் வளர்வது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

### பண்பாட்டுத் திருவிழாவாக நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது!

ஊரைப் பாதுகாக்க வேண்டும். அதன் பழமை மாறாமல் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் நவீன வசதிகள் எல்லாவற்றையும் ஏற்படுத்தியும் தர வேண்டும். பழமைக்குப் பழமையாக, புதுமைக்குப் புதுமையாக இளைஞர்கள் இயங்க வேண்டும். பொழுதுபோக்கு விழாவாக இல்லாமல், பண்பாட்டுத் திருவிழாவாக இதை நீங்கள் நடத்திக்கொண்டு வருவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற பெருமையும் பெருமிதமும் உள்ளவர்களாக எதிர்காலத் தலைமுறை வளர வேண்டும்!

### மனிதநேயம் போற்றுவோம்! மக்கள் ஒற்றுமை போற்றுவோம்!

இதுபோன்ற விழாக்கள் கூட்டுறவு எண்ணத்தையும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற உணர்வையும் உருவாக்கும். சாதி, மத வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல், இதுபோன்ற பண்பாட்டு விழாக்களை எல்லோரும் கொண்டாட வேண்டும்.

மனிதநேயம் போற்றுவோம்! மக்கள் ஒற்றுமை போற்றுவோம்! என்ற அடிப்படையில் இது போன்ற விழாக்கள் மாநிலம் முழுவதும் நடைபெற வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

நிதி அமைச்சகம் - அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த

## அலுவலகங்களின் கீழ்வரும் காலியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி !



*புதுடெல்லி, ஆக.9-*

*ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் மற்றும் அதன் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த அலுவலகங்களின் கீழ் வரும் காலியிடங்களை நிரப்ப ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் மற்றும் அதன் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த அலுவலகங்களின் கீழ் வரும் காலியிடங்களை நிரப்ப ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா?*

*அப்படியானால், அதன் விவரங்கள்.*

*1.7.2024 அன்று நிதியமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து உதவி பெறும் மற்றும் கீழ்நிலை அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்த வரையில் உள்ள பதவி நிலை மற்றும் பணிபுரிவோர் எண்ணிக்கை விபரம்?*

*எஸ்சி/எஸ்டி/ஓபிசி மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்காக இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் இதுகாறும் நிரப்பப்படாமல் காலியிடங்களை நிரப்புவதற்காக ஏதேனும் சிறப்பு ஆட்சேர்ப்பு இயக்கத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதா? அதன் விபரம் குறித்து டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-*

*ஒன்றிய அரசின் நிதியமைச்சகத்தில் காலியிடங்கள் ஏற்படுவதும் நிரப்புவதும் ஒரு தொடர்ச்சியான செயலாகும். காலியிடங்கள் ஏற்படும் போது, அவை UPSC, SSC, வங்கி ஆட்சேர்ப்பு வாரியங்கள் போன்ற ஏஜென்சிகள் மூலமாகவோ அல்லது பிரதிநிதித்துவம் அல்லது பதவி உயர்வு மூலமாகவோ நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நிரப்பப்படுகின்றன.*

*01.07.2024 அன்று நிதியமைச்சகம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட/துணை அலுவலகங்கள், தன்னாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களின் 11,03,989 பணியிடங்கள் பணியமர்த்தப்பட்டுள்ளது.*

*நிதி அமைச்சகம், அதனுடன் இணைக்கப்பட்ட/அடிப்படை அலுவலகங்கள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை காலியாக உள்ள பணியிடங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிரப்புகின்றன. அக்டோபர் 22, 2022 அன்று பிரதமரால் தொடங்கப்பட்ட ரோஸ்கர் மேளாவில், நிதி அமைச்சகம் உட்பட அரசாங்கத்தில் காலியாக உள்ள பதவிகள் இந்திய ஒன்றிய அரசால் பணி முறையில் நிரப்பப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் மத்திய அளவில் 12 ரோஸ்கர் மேளாக்கள் 4550 நகரங்களில் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில். அனைத்து பணியிடங்கள் மற்றும் பதவி உயர்வுகளிலும் அரசின் இட ஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.*

---

மாணவர்கள் எவ்வித அச்சமும் இன்றி - கலந்தாய்வு மூலம்

## கல்லூரி - பாடப் பிரிவுகளை தேர்வு செய்வீர் !

### பொறியியல் கலந்தாய்வு குறித்து - தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிவிப்பு !

*சென்னை, ஆக.9-*

*தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு 06.05.2024 முதல் தொடங்கி 06.06.2024 வரை நடைபெற்றது. மேலும் மாணாக்கர்களின் கோரிக்கையின் அடிப்படையில் 10.06.2024 முதல் 12.06.2024 வரை விண்ணப்பப் பதிவு நீட்டிக்கப்பட்டது.*

*பதிவு செய்யப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2,09,645. சான்றிதழ் சரிபார்ப்புக்கு பிறகு 1,97,601 தகுதியான மாணாக்கர்களுக்கான தரவரிசை பட்டியல் 10.07.2024 அன்று வெளியிடப்பட்டது.*

*தரவரிசை பட்டியல் வெளிப்படை தன்மையுடன் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை அதிகாரப்பூர்வ இணையதளமான www.tneaonline.org இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் மாணாக்கர்களின் தரவரிசை எண்(Rank), விண்ணப்ப எண்(Application Number), பெயர்(Name), பிறந்த தேதி(Date of Birth), மதிப்பெண் (Aggregate Mark), வகுப்பு (Community) மற்றும் வகுப்பு தரவரிசை எண் (Community Rank) ஆகிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இதில் மாணாக்கர்களின் தொலைபேசி எண்ணோ மற்றும் மாவட்ட விபரமோ எந்த இடத்திலும் தெரிவிக்கப்படவில்லை.*

*மாணாக்கர்களின் நலனுக்காக கொடுக்கப்பட்ட தரவரிசை தகவல்களை சில சமூக விஷமிகள் தங்களது சுயநலத்திற்காக வேண்டி தவறான தொலைபேசி எண் மற்றும் தவறான மாவட்ட விவரங்களைக் கொண்டு மாற்றி அமைத்து வெளியிட்டது தெரிய வருகிறது.*

*இணைக்கப்பட்ட தொலைபேசி எண் மற்றும் மாவட்ட விவரங்கள் அதிகாரப்பூர்வமான தரவு தளத்தில் உள்ள தொலைபேசி எண்கள் மற்றும் மாவட்டங்களின் பெயர்களுடன் 88.34% பொருந்தவில்லை.*

*இது தொடர்பாக சைபர் கிரைம் துறைக்கு புகார் அளிக்கப்பட்டு தரவுகளை தவறாக கையாண்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.*

*தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான அதிகாரப்பூர்வ தகவல் சேமிப்பு கட்டமைப்பு firewall, secure socket layer certificate மற்றும் virtual private connection ஆகிய தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் தகவல்கள் சிறிதளவும் கசியாவண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இந்த ஆண்டு தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை கலந்தாய்வு 22.07.2024 அன்று தொடங்கியது. இதுவரை சிறப்பு இட ஒதுக்கீட்டில் 836 மாணாக்கர்களுக்கும், முதல் சுற்றில் 24,177 மாணாக்கர்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்ட இடங்கள் வெளிப்படைத்தன்மையாக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.*

*மாணாக்கர்கள் சேர்க்கை தொடர்பான அங்கீகரிக்கப்படாத தொலைபேசி அழைப்புகளை நம்ப வேண்டாம் மற்றும் தங்களது User Name and Passwordயை யாரிடமும் பகிர வேண்டாம். ஏதேனும் சந்தேகங்கள் எழும்பச்சத்தில் அருகில் உள்ள TFC மையத்தை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம் மற்றும் 18004250110 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும் தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.*

*மாணாக்கர்கள் எவ்வித அச்சமும் இன்றி தங்களது விருப்பத்திற்கு ஏற்றது போல் கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளை கலந்தாய்வின் மூலம் தேர்வு செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.*